பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 112 நாள்: 21.02.2026

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், மாநகராட்சியின் சார்பில் 23 எண்ணிக்கையிலான புதிய வாகனங்களைப் பயன்பாட்டிற்கு இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், மாநகராட்சியின் சார்பில் 23 எண்ணிக்கையிலான புதிய வாகனங்களைப் பயன்பாட்டிற்கு இன்று (21.02.2026) தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளைப் பிடிக்க பயன்படுத்தப்படும் வாகனங்களில் கழிவு செய்யும்நிலையில் இயங்கும் வாகனங்களுக்கு மாற்றாக இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் ரூபாய் 2.28 கோடி மதிப்பீட்டில் 8 எண்ணிக்கையில் கால்நடைகள் பிடிக்கும் புதிய வாகனங்களும், பெருநிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் கீழ் அண்ணாநகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிக்காக எச்.டி.எப்.சி. வங்கியின் சார்பில் 10 மூன்று சக்கர மின்கல வாகனங்கள் மற்றும் பெடரல் வங்கியின் சார்பில் 5 மூன்று சக்கர மின்கல வாகனங்ளும் என மொத்தம் 23 வாகனங்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள், பொது இடங்களில் சுற்றுப்புற சூழலை மேம்படுத்திடும் வகையிலும் அழகுபடுத்திடும் வகையிலும் தன்னார்வலர்கள் மூலமாக சூரிய காந்தி விதைகள் நடும் பணியினை மாண்புமிகு மேயர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திரு.த.விசுவநாதன், எச்.டி.எப்.சி. வங்கி தமிழ்நாடு தலைவர் திரு.பிரேம் ஆனந்த், மண்டலத் தலைவர் திரு.இராமச்சந்திரன் மற்றும் அலுவலர்கள், தன்னார்வலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.